## தெரிவுக்குழு மாகாணசபைத்தேர்தலுக்குப்பின்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 பங்குனி 31 இதழ் 57
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 13 — 04 — 1993

## யாழ். விஜயம்

(கொழும்பு) இனப் பிரச்சினைத் தீர்வுக்கு ஆலோசனைகளைச் சமர்ப்பிக்க என நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு விடுதலைப் புலிகள் தலைவர்களை சந்திப்பதற்காக யாழ்ப்பா (3-ம்பக்கம் பார்க்க)

## உப ஜனாதிபதி ஒருவரை நியமிக்க ஆலோசனை

(கொழும்பு) உபஜனாதிபதி ஒருவரை நிய மிப்பதற்கு ஆலோசனை தெரி விக்கப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. வடக்கு கிழக்கு மாகாணம் (3ம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு எல்லைகளை மீளாய்வு செய்ய சிபார்சு

(கொழும்பு) வடக்கு-கிழக்கு மாகாணங் களின் எல்லைகளை மீளாய்வு செய்து இரண்டு வெவ்வேறு சபைகளை அமைப்பதற்கான ஆலோசனை ஒன்றும் நாடா ளுமன்றத் தெரிவுக்குழுவிடம் (3ம் பக்கம் பார்க்க)

## பலகோடிரூபாபெறுமதியான

# ஆயுதகொள்வனவுவிடயத்தில்

# அரசும்-இராணுவமும் இழுபறி!

(கொழும்பு)

பல கோடி ரூபா பெறுமதியான ஆயுத, வெடிமருந்துக் கொள்வனவு சம்பந்தமான ஒப்பந்தம் ஒன்றில், ஸ்ரீலங்கா அரசுக்கும் இராணுவத்துக்கும் இடையே பெரும் இழுபறிநிலை ஒன்று ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினரின் அவசரத் தேவைக்கென, இந்த ஒப்பந்தத்தின் கீழ் பெருமளவு வெடிமருந்துப் பொருட்கள் தருவிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

இந்த ஆயுத, வெடிமருந் என இராணுவத்தின் ஆயுதத் தின் கீழ் சம்பந்தப்பட்ட
துக் கொள்வனவு ஒப்பந்தம் கொள்வனவு மீளாய்வுச் ஆயுதங்களையும், வெடிமருந்து
பிரிட்டிஷ் நிறுவனம் ஒன் சபை சிபார்சு செய்திருந்தது. களையும் கொள்வனவு செய்வ
றுக்கே வழங்கப்படவேண்டும் ஆனால் இந்த ஒப்பந்தத் (4-ம் பக்கம் பார்க்க)

## அநுராதபுரத்தில் புலிகள் தாக்கு

## இராணுவமத்தியமுகாம் அழிப்பு

### பல படையினர் உயிரிழப்பு

(மணிலா) அநுராதபுரம் இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நேற்று மேற்கொண்ட தாக்குதலில் படையாள் ஒருவர் பலி யானதாக ஸ்ரீலங்கா கூட்டுப் படை தலைமையகம் தெரிவித்ததாக வெரித்தாஸ் வானொலி நேற்று தெரிவித்தது. இத்தாக்குதலில் பல படையினர் பலியாகியிருக்கக்கூடும் என்றும் ராணுவ மையமுகாம் அழிக்கப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## புலிகள் தாக்குபற்றிவிசாரிக்க பாதுகாப்பு அமைச்சு உத்தரவு!

(கொழும்பு) வடபகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களுக்குள், விடுதலைப்புலிகள் எவ்வாறு ஊடுருவி மிக சாமர்த்தியமாக தாக்குதல்களை நடாத்தினர் என்பதை உடன் விசாரணை நடாத்துமாறு பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

வடபகுதியில் உள்ள ராணுவ முகாம்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்கள் நடாத்த திட்டமிட்டுள்ளார்கள், என்று இராணுவ புலனாய்வுப்பிரிவு முன்னெச்சரிக்கை செய்திருந்தும் அனைத்து இராணுவ முகாம்களும் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருந்தபோதும் விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் நடைபெற்றிருப்பது அரசுக்கு பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளதாக (4ம் பக்கம் பார்க்க)

### கிளாலி-பூநகரி படகுச்சேவை

(யாழ்ப்பாணம்) கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று 13ம் திகதி செவ்வாய்க்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறுமென தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையினர் அறிவித்துள்ளனர். (இ)

### வலி.மேற்குப் பகுதியில்

## படையினரின் பிடியில் சிக்கிய 12 பேர் நேற்று விடுவிப்பு

(யாழ்ப்பாணம்) கடந்த வருடம் வலி-மேற்குப் பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கையின்போது, இளவாலை-மாதகல் பகுதியில் படையினரின் பிடியினுள் அகப்பட்ட மூன்று வயோதிப (4-ம் பக்கம் பார்க்க)

### க. பொ. த. (உ/த) 1992:

## மொத்த புள்ளிகள் நேற்று வந்தன

(யாழ்ப்பாணம்) 1992ம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தர பரீட்சை முடிவுகளின் யாழ்ப்பாண மாவட்ட பரீட்சார்த்திகளின் மொத்தப் புள்ளிகள் நேற்று யாழ்ப்பாண கல்விப் பணிப்பாளர் திரு. சுந்தரலிங்கத்தினால் எடுத்து வரப்பட்டது. (4ம் பக்கம் பார்க்க)

### க. பொ. த. (சா/த) 1992 டிசம்பர்:

## சங்கீதம், நடனம் செயல்முறை பரீட்சை 20-ம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்) க.பொ.த (சாதாரண தரம்) 1992 டிசம்பர் பரீட்சைக்கான சங்கீதம் (கர்நாடகம்), நடனம் (பரதம்) செயல்முறை பரீட்சைகள் எதிர்வரும் 20ம் திகதி செவ்வாய்க் (3-ம் பக்கம் பார்க்க)

### 5ம் ஆண்டு புலமைப் பரிசில் - 1991

## வெட்டுப்புள்ளி 135

(யாழ்ப்பாணம்) 1991ம் ஆண்டு நடைபெற்ற ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் விசேட பரீட்சைக்கான வெட்டுப்புள்ளிகள் நேற்றுயாழ்ப்பாணமாவட்டக் கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கத்தினால் எடுத்து வரப்பட்டது. (4-ம் பக்கம் பார்க்க)

## மில் இயந்திரத்தில் சேலை சிக்கி பெண் மரணம்

(யாழ்ப்பாணம்) அரிசி ஆலை ஒன்றுக்கு நெல் உடைக்கச் சென்ற பெண் ஒருவரின் சேலை இயங்கிக்கொண்டிருந்த இயந்திர நாடா ஒன்றில் சிக்கியதால், அவர் பெரும் காயத்திற்குள்ளாகி மரணமான பரி (4ம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவை அதிகாரியின் மறைவுக்கு துக்கம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்) செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை உபதலைவர் க. புவனேந்திரன் கடமையின் போது அகால மரணமெய்தியதன் பொருட்டு யாழ் பிரிவுகள் யாவும் ஒரு மாதகாலத்திற்கு துக்கம் அனுஷ்டிக்குமாறு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளைச் செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

யாழ் கிளை மற்றும் பிரிவுகள் அனைத்தும் கொண்டாட் (4-ம் பக்கம் பார்க்க)

## படை அதிகாரி ஊர்ஜிதம்

(கொழும்பு) இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் உப தலைவர் க. புவனேந்திரன் கடந்த சனிக்கிழமை கொல்லப்பட்ட சம்பவத்தை இராணுவத்தின் உயர் அதிகாரி ஒருவர் நேற்று உறுதிப்படுத்தினார்.

இச்சம்பவம் இடம் பெற்ற சமயம் ஊரடங்கு உத்தரவு (4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

சொர்ட்லிக்கஸ், வீவா, பேசத்தெரிந்தவர் தேவை. அனுபவம் முடியுடன் கூடியது Taste Line Industries (PVT) Ltd No: 14, Seenier Lane, Jaffna. (A-3024)

### வியாபாரிகளுக்கு

தரமான இமிடேசன்கோல்ட் கவரிங் நகைகள், மணப்பெண் சோடனை நகைகள், லேஸ் நூல் வகைகள், சிறுவர் விளையாட்டுப் பொருட்கள் மற்றும் வெளிநாட்டு உள்நாட்டு அழகு சாதனப் பொருட்களை நிதான விலைக்கு மொத்தமாக பெற்றுக்கொள்ள ஜெயா அழகு சாதன மாளிகை, 177-A, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (ஏ-3042)

### மிருதங்கம்

மிருதங்க பரீட்சை எடுக்கும் மாணவர்களின் மிருதங்க திருத்த வேலைகள் மிக விரைவில் நல்ல முறையில் மலிவாக செய்து கொடுக்கப்படும் கோவிந்தபிள்ளை விஜயகுமார் பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (இ-4090)

### சேவை

மக்கள் அபிமானத்தைப் பெற்ற ஸ்ரீலங்கா அச்சகம் ஸ்ரீலங்கா புத்தகசாலையுடன் இணையாமல் தனித்தே இயங்குகின்றதென்பதை அன்பான மக்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கின்றோம். ஸ்ரீகாந்தா அச்சக லேன், ராஜா தியேட்டர் அருகாமை - யாழ்ப்பாணம். (எ-3025)

### இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் 93/94

சகல மக்களினதும் பேராதரவைப் பெற்ற இரகுநாதையர் ஸ்ரீமுக வாக்கிய பஞ்சாங்கம் விற்பனையாகின்றன. சொற்ப பிரதிகளே கையிருப்பில் உண்டு. சகல புத்தகக் கடைகளிலும் கிடைக்கும். விலை 60-00 மட்டுமே. (ஏ-3041)

### 1993—94 புதுவருடப் பலன்

புதுவருஷப்பிறப்பு கருமம் ஆரம்பிக்க முகூர்த்தவேளை, வைசேஷம், செவ்வாய் மாற்ற பலாபலன்களும் (சதயாவின்) வைரேகை சாஸ்திரமும் அடங்கியது. ரூ 8-50. எங்கும் விற்பனையாகின்றது. இ. ராசதுரை ஸ்ரோஸ், இருபாலைச்சந்தி. (சி-2)

### சீனி, மண்ணெண்ணெய் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

ஊரகாவற்றுறை ப. நோ. கூ. சங்கத்தால் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் ரூபா 15 வீதமும் உலர் உணவு அட்டைகளுக்கு ஒரு கிலோ சீனி ரூபா 27-75 வீதமும் விற்பனை செய்யப்பட்டுவருகிறது.

### திருட்டு

(அரியாலை)

திருநெல்வேலியிலுள்ள மருத்துவமனையில் கடந்த 3ந் திகதி சத்திரசிகிச்சை கூடத்திற்கு அருகில் நின்ற தனியாருடைய சைக்கிள் ஒன்றும் லேடி சைக்கிளிலுள்ள முன்சில்லும் திருடப்பட்டுள்ளன. இதுபற்றி காவல் துறையில் புகார்செய்யப்பட்டுள்ளது. (59)

# சுதேச மருத்துவ அபிவிருத்திக் கருத்தரங்கு

(கிளிநொச்சி)

சுதேச வைத்தியத்தை கிளிநொச்சியில் அபிவிருத்தி செய்ய எடுக்கப்படும் நடவடிக்கைக்கு எனது ஒத்துழைப்பு என்றும் உண்டு என்று கிளிநொச்சி நகரில் இடம் பெற்ற சுதேச மருத்துவ அபிவிருத்தி கருத்தரங்கில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபரும் கரைச்சி பிரதேசசபை விசேட ஆணையாளருமான செல்வி என். இந்துமதி கூறினார்.

கிளிநொச்சி சித்த ஆயுர்வேத வைத்தியர்சங்க ஏற்பாட்டில் டாக்டர் கே. வி. கே திருலோகமூர்த்தி தலைமையில் இக்கருத்தரங்கு இடம்பெற்றது.

அதிபர் கே. எம். டி. ஜெயராசா, கிராமமுன்னேற்ற சங்கத் தலைவர் எஸ். வேலாயுதம் மாவட்ட வீடமைப்புத் திணைக்களத்தைச் சேர்ந்த திரு. சபா, வைத்தியர் சங்க செயலாளரும், டாக்டருமான அ. ஸ்ரீரங்கநாதன், ஆசிரியர் திரு ஆறுமுகம் உட்பட பலர் உரையாற்றினார்கள். (83)

## வடமராட்சியில் நான்கு பாடசாலைகளில் வானியல் பாசறை!

(பருத்தித்துறை)

வடமராட்சிக் கோட்டப் பகுதியிலுள்ள எட்டுக்கொத்தணிப் பிரிவுகளிலுள்ள விஞ்ஞான ஆசிரியர்களுக்கான வானியல் பாசறைகள் நான்கு பாடசாலைகளில் நடைபெற்றன.

வடமராட்சி பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. ச. செல்லத்துரையின் நடவடிக்கைகளையடுத்தே இவ்வானியல் பாசறைகள் நடைபெற்றன.

உடுத்துறை நாகர் கோவில் கொத்தணிகளுக்கான வானியல் பாசறை செம்பியன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும், கரவெட்டி நெல்லியடி கொத்தணிகளுக்கான வானியல் பாசறை கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியிலும், வல்வெட்டித்துறை, உடுப்பிட்டிகொத்தணிகளுக்கான வானியல் பாசறை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியிலும், பருத்தித்துறை புலோலி கொத்தணிகளுக்கான வானியல் பாசறை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் நடைபெற்றன. (52)

## APPLICATION FOR THE POST OF PROJECT CO-ORDINATOR

Applications are Invited from suitable candidates for the Post of Project Co-ordinator.

1. Age above 45 years.
2. Experience in Preparation, Implementation and Monitoring of Community Development, Rehabilitation Projects.
3. Salary not less than Rs. 4000/-
4. Period of Employment: One year.
5. Closing date: 21-04-93.

Applications to be forwarded to,

The Chairman,
F. R. G PROJECT IMPLEMENTATION ORGANIZATIONS
C/o. N G O COUNCIL,
100, RASAVINTHODDAM,
JAFFNA.

(A 3050)

## யாழ்ப்பாணம் அருள்மிகு அத்தியடி பிள்ளையார் கோயில் தேர் உற்சவம்

14-04-93 புதன்கிழமை (நாளை)

காலை 8-00 மணிக்கு

வசந்தமண்டப பூசையும்,

பஞ்சமுகார்ச்சனையும்,

தொடர்ந்து காலை 9-00 மணிக்கு

தேர் உற்சவமும்

நடைபெறும். (ஏ-3049)

## இன்று

(யாழ்ப்பாணம்)

நெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் வருடாந்தப் பொங்கல் விழா புதுவருடம் பிறப்பும் இன்று 13ம் தேதியும் நாளை 14ம் தேதியும் நடைபெற உள்ளது. (சு)

0 0 0

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீமுகவருஷபுதுவருடத்தை முன்னிட்டு தில்லையாளி அருள்மிகு ஞான வைரவர் ஆலயத்தில் இன்றுமாலை 6-30மணிக்கு விசேட அபிஷேகம் நடைபெற்று வைரவ சுவாமி வெளி வீதி உலா வருவார்.

0 0 0

(உடுவில்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய சப்பறத் திருவிழா இன்று 13ம் தேதி செவ்வாய்கிழமை நடைபெறும். அலங்கரிக்கப்பட்ட சப்பறத்தில் விநாயகப் பெருமான் வீதிவலம் வந்து அருள்பாலிப்பார். (109)

0 0 0

கொழும்புத்துறை

கொழும்புத்துறை சனசமூக நிலையத்தின் வருடாந்த விளையாட்டுப்போட்டிகள் புதுவருடப்பிறப்பை முன்னிட்டு இன்று 13ஆம் திகதியும் 14 ஆம் திகதியும்15ஆம் திகதியும்நடைபெற வுள்ளது.

நிலையத்தலைவர் க. நடராசா தலைமையில் நடைபெறும் 3 நாள் விழாவில் மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், சங்கீதக்கதிரை கோலம் போடுதல், இன்னும்பல விளையாட்டுப்பொட்டிகளும் இடம் பெற உள்ளது

0 0 0

(பருத்தித்துறை)

தமிழ்த்தாத்தா சுத்தமுருகேசனாரின் "நல்லை நாவலன் கோவை" கையெழுத்துக் காவியம் நூலாக அச்சேற்றப்பட்டு வெளியீடு செய்யப்படவுள்ளது, இதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டமொன்று இன்று பி. ப 4 மணிக்கு தென் புலோலி உபய கதிர்காம பெரிய தேவனத்தாய சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (52)

## துப்பாக்கிச்சூடு குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு அம்பனைப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர் அளவெட்டி வடக்கு குடியிருப்புப் பகுதியை நோக்கி நேற்றுமுன் தினம் நண்பகல் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தால் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த இரு குடும்பஸ்தரான அளவெட்டி வடக்கைச் சேர்ந்த பொன்னையா சின்னையா 33-வயது என்பவரே படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். (56-சி)

## 'வெளிச்சம்' வருகிறது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் மாதாந்த வெளியீடான வெளிச்சம் சித்திரை மாத இதழ் இன்று வெளிவருகின்றது. இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரன் வழங்கிய அன்னை பூபதி பற்றிய நினைவுச் செய்தியும், புதுவை இரத்தினதுரையின் பாடல் ஒன்றும் இடம்பெறுகின்றன.

அத்துடன் சொர்ணகுமாரின் 'கல்லறை தழுவும் காற்று' அ. மலரோனின் 'கருவறைகள்' கிரிஷா ஜொதிநாதனின் 'நிமிர்தல்' ஆகிய சிறுகதைகளும் முருகையன், இ சிவஞானம் ஆகியோரின் இரண்டு கவிதைகளும் உள்ளன. எண்பதுகளில் தமிழ்க் கவிதைகளின் போக்குகள் பற்றி சொக்கனும், நடனமும் உலவியலும் என்ற கட்டுரையை சபா ஜெயராசாவும் எழுதியுள்ளனர். யோ. எழினி எழுதிய நாடகம் ஒன்றும், சுவாதித்திருநாள் எழுதிய சுவைக் குறிப்பும், புதுநிலம் பகுதியில் மா மயிலவன், ந. கண்ணன் இத்தாவில் க. சிவராசா ஆகியோரின் கவிதைகளும் இடம் பெறுகின்றன. (ஸ)

## சர்வதேச விதிகளை மீறி யாழ். செஞ்சிலுவைச்சங்க உபதலைவர் பலியாக்கப்பட்டமைக்கு அதிருப்தியை தெரிவிக்குமுகமாக ஆலோசனைக் கூட்டம்

இடம்: யாழ். வை. எம். சீ. ஏ. மண்டபம்

காலம்: 13-04-93 மாலை 3-00 மணி

அச்சுவேலிப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகளின் போது உயிர் காப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த வேளை சர்வதேச விதிகளை மீறி செஞ்சிலுவைக் கொடியை உதாசீனம் செய்து வீசப்பட்ட குண்டிற்கு பலியாகிய யாழ் செஞ்சிலுவைச் சங்க உபதலைவர் திரு. க. புவனேந்திரன் அவர்களுக்கு ஏற்பட்ட சம்பவம் மனிதநேய பணிகளில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள், தொண்டர்கள் ஆகிய எம் அனைவருக்கும் பொதுவானதாகவே கருதுகிறோம்.

சர்வதேச விதிமுறைகளை கண்காணித்து தமிழீழ மக்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டிய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், தாம் சார்ந்த அமைப்பின் சார்பான ஒருவரையே பாதுகாக்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

தொண்டர் அமைப்புக்கள் இச் சம்பவம் தொடர்பாக மௌனம் சாதிக்கின்றன.

தொண்டர்கள், பணியாளர்கள் ஆகிய நாம், மனிதநேயப் பணிகளில் ஈடுபட்டிருந்த வேளை திரு க. புவனேந்திரன் அவர்கள் பலியாக்கப்பட்டமைக்கான எமது அதிருப்தியைக் காட்டுமுகமாக எடுக்கவுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக 13-04-93 மாலை 3-00 மணிக்கு வை எம் சீ ஏ. மண்டபத்தில் (யாழ்ப்பாணம்) ஆராயவுள்ளோம். மேற்படி கூட்டத்தில் சமூகசேவை அமைப்புக்களின் தொண்டர்கள் பணியாளர்கள் அனைவரையும் கலந்து அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கும்படி கோருகிறோம்.

அமைப்புக்குழு,
சர்வதேச அமைப்புக்களின்
தொண்டர்கள், பணியாளர்கள்.

(கி-6)

# பாக். சிந்து மாகாணத்தில் பத்து குண்டுகள் வெடிப்பு

(கராச்சி)

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் நேற்று முன் தினம் காலை தொடர்ச்சியாக பத்து குண்டுகள் வெடித்துள்ளன.

இக்குண்டு வெடிப்புகளில் சிந்துமாகாண அமைச்சர் ஒருவரின் தாயார் உட்பட 20 பேர் வரை படுகாயமடைந்துள்ளனர்.

இக்குண்டு வெடிப்புகளால் பொலிஸ் நிலையம், ஹோட்டல், வர்த்தக நிலையங்கள் பலத்த சேதமடைந்துள்ளன. பல லட்சரூபா பெறுமதியான சொத்துக்கள் நாசமாகியுள்ளன.

இதுகுறித்து விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாக சிந்துமாகாண முதலமைச்சர் தெரிவித்துள்ளார். (க-இ)

## இயங்காத பாடசாலைகளை இயக்க நடவடிக்கை

(பண்டத்தரிப்பு)

வலிமேற்கு வலி வடக்குப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து சமீபத்தில் இயங்காதிருக்கும் பாடசாலைகளை தற்போது செயற்பட்டு வரும் பாடசாலைகளுடன் இணைவுபடுத்தி முறையாக இயங்கச் செய்வதற்கு பண்டத்தரிப்பு கல்விக்கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

அடுத்த தவணை ஆரம்பமாகும்போது மேற்படி இடம் பெயர்ந்த மாதகல், இளவாலை காங்கேசன்துறை பகுதியிலுள்ள பாடசாலைகளை மல்லாகம், மானிப்பாய் ஆகிய பகுதிகளில் இயங்கிவரும் பாடசாலைகளுடன் இணைவுபடுத்தி நடாத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக திரு. துரைசிங்கம் தெரிவித்தார். (72 இ)

## இராசி பலன்

13-04-1993

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு பங்குனி 31)

ஸப்தமி பி. ப. 5-22 வரை பூராடம் மு. இ. 10-39 வரை இராகுகாலம் மாலை 3-06 முதல் 4-36 வரை சுபநேரம் காலை 10-36 முதல் 12-04 வரை மரணயோகம் புத்தாண்டு பிறப்பு இரவு 7-47 விஷு புண்ணியகாலம் இரவு 8-47 முதல் இரவு 11-47 வரை.

மேடம்: வீண்வாக்கு வாதம் மனசஞ்சலம், காரியதடை.

இடபம்: அமைதிக்குறைவு, அவமதிப்பு தொழில் பாதிப்பு

மிதுனம்: வாக்குவன்மை, கடிதத்தொடர்பு, பணவரவு.

கடகம்: விவகாரங்கள் வெற்றி, நண்பர் ஆதரவு, சுபச்செய்தி.

சிங்கம்: வீண் சச்சரவு, உடல் உபாதை, மனக்கவலை.

கன்னி: கடின உழைப்பு, தொழில் கஷ்டம், வெறுப்பு.

துலாம்: பெரிய மனிதர் சந்திப்பு: ஆலய தரிசனம், பாராட்டு

விருச்சிகம்: கடன்களால் கவலை, செலவுகள் கடுமை, முயற்சித்தடை.

தனுசு: உறவினர் ஆதரவு. வெளியூர் தகவல்கள், காரிய சாதனை.

மகரம்: மேலதிகாரிகளின் பகை தொழில் நஷ்டம், மனப் போராட்டம்.

கும்பம்: புதிய முயற்சி, பொதுத்துறை ஈடுபாடு, தற்பெருமை

மீனம்: அதிக வருவாய், மனச்சந்தோசம், பயணம்.

— ஜோஸ்யர்

# பழைய இடத்தில் பரு. பஸ் நிலையம்

(புலோலி)

பருத்தித்துறை பஸ்நிலையம் மீண்டும் பழைய இடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

முன்னர் மருதடியிலிருந்து சகல மினிபஸ் சேவைகளும் நடைபெற்றுவந்தன. இம் மாதம் முதலாம் திகதி தொடக்கம் பழைய பஸ்நிலையத்திலிருந்து மினிபஸ் சேவைகள் நடைபெற்றுவருகின்றன. (61)

## அன்னை பூபதி நினைவு தென்மராட்சியில் அனுஷ்டிப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சியில் அன்னை பூபதியின் 5-ம் ஆண்டு நினைவு நாள் மிகவும் உணர்ச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

பளைச்சந்தி, எழுதுமட்டுவாள் சந்தி, மிருசுவில், உசன், கொடிகாமம் பஸ் நிலையம், புத்தூர்சந்தி, மீசாலை சந்தி, சங்கத்தானை, சாவகச்சேரி நவீன சந்தை பஸ்நிலையம், நுணாவில், நுணாவில் சந்தி, கைதடி டயர் தொழிற்சாலை முகாம், கைதடிச்சந்தி, நாவற்குழி சந்தி ஆகிய பகுதிகளிலும் மற்றும் பாடசாலைகள், நிறுவனங்கள் அலுவலகங்கள், சங்கங்கள், இல்லங்கள் தோறும் அலங்கரிக்கப்பட்ட அலங்காரப் பந்தல் அமைக்கப்பட்டுள்ளன. இப்பந்தல்களில் அன்னை பூபதியின் திருவுருவப் படங்கள்வைக்கப்பட்டு ஈகைச் சுடர் ஏற்றி மலர்மாலை சாத்தி மலர் அஞ்சலி செய்யப்பட்டு வருகின்றன.

இவைதவிர சுழற்சிமுறை உண்ணாவிரதங்களும், சிரமதானப பணிகளும் தென்மராட்சியின் பல பகுதிகளிலும் ஆங்காங்கே நடைபெற்று வருகிறது. (156)

## இளவாலை உப தபால் அலுவலகம் மூடப்பட்டது

(பண்டத்தரிப்பு)

சங்கானை தபால் அலுவலகத்தில் இடம்பெயர்ந்து இயங்கிவந்த இளவாலை உபதபாலகம் மேவிடத்தின் பணிப்புரையை அடுத்து பூட்டப்பட்டுள்ளது.

இதனை அடுத்து சங்கானை தபால் அலுவலகத்தில் செயற்பட்டுவரும் பண்டத்தரிப்பு தபால் அலுவலகம் இளவாலை உபதபால் அலுவலகத்தின் பணிகளை மேற்கொண்டுவருகின்றது.

இடம்பெயர்ந்த இளவாலைப் பகுதியை சேர்ந்த மாதாந்த பொதுசன உதவிப்பணத்தை பெறுபவர்கள் சங்கானையில் செயற்பட்டுவரும் பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (72-சி)

## த. பொ. தே. முன்னோடித் தேர்வு பற்றி அபிப்பிராயம் திரட்டல்

(யாழ்ப்பாணம்)

1992இல் நடந்து முடிந்த த. பொ. தே. முன்னோடித் தேர்வு சார்பான பின்வரும் விடயங்கள் பற்றிய தத்தமது கருத்துக்களை தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை வேண்டிநிற்கிறது. பரீட்சைக் காலம், பாடத்திட்டம், வினா உருப்படிகள், விடைத்தாள் மதிப்பீடு.

ஆர்வலர்கள் தங்கள் கருத்துக்களை எழுத்துமூலமாக திரு. க. அருண் ஆசிரியர், 19, நாயன்மார்கட்டு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 23-4-93ற்கு முன்னர் அனுப்பிவைக்கும்படி வேண்டப்பெறுகின்றனர்.

இது சார்பாகப் பின்வரும் திகதிகளில் காலை 9-30 மணிக்கு ஒவ்வொரு கல்விக்கோட்டங்களுக்கும் ஆய்வுக்குழு சென்று கருத்துக்களை ஏற்றுக் கொள்ளும்.

கோட்டங்கள்

யாழ்ப்பாண, வேலணை கோட்டம்- தமிழீழக் கல்விக்கழக அலுவலகம் 17ம் திகதி, மருதனுமடம், பண்டத்தரிப்பு கோட்டம்- இராமநாதன் கல்லூரி 18ம் திகதி, வடமராட்சி கோட்டம்- யா/வேலாயுதம் ம. வி. 20ம் திகதி, தென்மராட்சி கோட்டம்- யா/டிறிபேக் கல்லூரி 23ம் திகதி. (சி)

## பல்கலைக்கழகத்திற்கு 3 மில்லியன் ரூபா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு கணணிகளை கொள்வனவு செய்வதற்கு பன்முகப் படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் 3 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு 50 லட்சம் ரூபா பெற்ற வர்த்தகர் கைது

(கொழும்பு)

இத்தாலியில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி இளைஞர்களிடமிருந்து 50 லட்சம் ரூபா பெற்று ஏமாற்றிய வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு பொலிஸார் இந்தக் கோடீஸ்வரரான வர்த்தகரைக் கைது செய்துள்ளனர். (இ-இ)

## பல கோடி ரூபா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்காவ உரிமை உள்ளூர் ஆயுதக் கொள்வனவு வர்த்தகர் ஒருவருக்கு வழங்கப்பட்டுவிட்டது.

இதனையடுத்தே இந்த இழுபறிநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த உள்ளூர்வர்த்தகருக்கு ஓமானுடனும் தொடர்பு இருப்பதாகவும், குறைந்த விலையில் வெடிமருந்துகளை அவர் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் எனவும், யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இராணுவத்தினருக்கு குறுகிய இடைவெளியில் இந்த வெடிமருந்துகளை தருவிப்பதற்கான அனுமதி அவருக்கு வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இதனையடுத்தே இந்த வெடிமருந்துகளை தருவிப்பதற்கான அனுமதி அவருக்கு வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தின் ஆயுதக் கொள்வனவு மீளாய்வு சபை சிபார்சு செய்த பிரிட்டிஷ் நிறுவனத்துக்கு இந்த அனுமதி வழங்கப்படாததால் அரசுக்கும் இராணுவத்திற்கும் இடையில் ஒரு திருப்தியற்ற நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (159-இ)

## மருதடி விநாயகர் தேர்

(உடுவில்)

மானிப்பாய் மருதடி விநாயகர் தேவஸ்தான ரதோற்சவம் ஸ்ரீமுக வருடப்பிறப்பு தினமாகிய நாளை புதன்கிழமை பகல் பன்னிரண்டு மணிக்கு நடைபெறும்.

காலை 10 மணிக்கு ஸ்ரீபஞ்சமுக விநாயகருக்கு வசந்த மண்டபத்தில் விசேட தீபாராதனைகள் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து ரதோற்சவம் நடைபெறும்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி, மானிப்பாய் மெமோரியல் மகாவித்தியாலயம் ஆகியவற்றைச் சேர்ந்த சாரணர்கள் ரதோற்சவத்திற்கு வருகை தரும் அடியார்களின் போக்குவரத்து, ஒழுங்கு முறை, கட்டுப்பாடு ஆகியவற்றை கவனித்துக்கொள்வர்.

செஞ்சிலுவைச் சங்க முதலுதவிப் பிரிவினர் முதலுதவி மற்றும் வைத்திய வசதிகளை கவனிப்பதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (10ஃ-7ட)

## வடக்கு-கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த இரண்டு மாகாணசபைகளுக்கும் இரண்டு முதலமைச்சர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

இரண்டு ஆளுநர்கள் இந்த மாகாணங்களுக்கு நியமிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவுக்குழுவுக்கு சிபார்சு செய்யப்படவுள்ளது. (இ-159)

## உப ஜனாதிபதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களை மேற்பார்வை செய்வதற்காகவே இந்த உபஜனாதிபதி நியமிக்கப்படவேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றக் கூட்டம் எதிர்வரும் 22-ம் திகதி கூடும்போது நாடாளுமன்றத் தெரிவுக் குழுவும் கூடவுள்ளது.

உப ஜனாதிபதி ஒருவரை நியமிக்கும் இந்த ஆலோசனை அன்றைய தினம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (159-இ)

## தெரிவுக் குழு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணம் விஜயம் செய்யவுள்ளதாக 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தல்கள் முடிவடைந்த உடனேயே தெரிவுக் குழு அதன் யாழ். விஜயத்தை மேற்கொள்ளும்.

தெரிவுக் குழு அங்கத்தவர்கள் யாழ் செல்வதற்கு வசதியாகச் சகல பாதுகாப்பு ஒழுங்குகளையும் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்ன ஏற்கனவே மேற்கொண்டுள்ளதாகவும் அச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (159-இ)

## க. பொ. த. (சா/த)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை ஆரம்பமாகும்.

இதற்கான பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகளை எதிர்வரும் 16, 19ம் திகதிகளில் யாழ். கல்வித் திணைக்களத்திலிருந்து சேகரித்து, பரீட்சார்த்திகளுக்கு விநியோகிக்கும்படி பாடசாலை அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பப்படும் எனவும் யாழ் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. (இ)

வாலிபரே, நீங்கள் பலவான்களாயிருக்கிறதினாலும், தேவ வசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினாலும், நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்ததினாலும், உங்களுக்கு எழுதுகிறேன். (I யோவான் 2: 14)

யாழ்ப்பாணத்தில் உள்ள வாலிப ஆண்கள், பெண்களுக்கான

விசேட அழைப்பு

இரு நாட்கள் எழுப்புதல் கூட்டங்களும், சுவிசேஷ தெய்வீக சுகமளிக்கும் ஆராதனைகளும்.

இடம்: இலங்கை பெந்தெகொஸ்தே சபை. 111, கண்டி வீதி, சுண்டிக்குளி.

காலம்: இன்று செவ்வாய்க்கிழமையும், நாளை புதன்கிழமையும்.

நேரம்: மு. ப. 9-00 மணி முதல் பி. ப. 6-00 வரை.

சுவிசேஷ சுகமளிக்கும் ஆராதனைகள் பி. ப. 4-00 மணிக்கு (இரு நாட்களும்) நடைபெறும்.

காலையில் வேத பாடங்கள்.

★ தங்குமிட வசதி ஒழுங்குபடுத்தப்படும்.
★ இலவச உட்பிரவேசம்
★ காணிக்கை சேர்க்கப்படமாட்டாது.

வாலிபரை அன்புடன் அழைக்கின்றோம்.

"வாலிபன் தன் வழியை எதனால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக் கொள்ளுகிறதினால் தானே." (சங்கீதம் 119: 9)

(சி 05)

## வீரப்பன் கண்ணிவெடிக்கும் புலிகளுக்கும் சம்பந்தமில்லை

(சென்னை)

சந்தனமர கடத்தல்காரன் வீரப்பனை பிடிக்கச் சென்ற பொலிசார் கண்ணிவெடியில் சிக்கிய சம்பவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் சம்பந்தமில்லையென தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

மேலும் வீரப்பனை பிடிப்பதற்கு இராணுவத்தை வரவழைக்க வேண்டிய அவசியமில்லையெனவும் அவர் கூறினார்.

நேற்று முன்தினம் சட்டப் பேரவையில் எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த கவனஈர்ப்பு பிரேரணை மீது பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதற்கு முன் பேசிய எதிர்க்கட்சி தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், இந்த கண்ணிவெடி சம்பவத்தில் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்றும், வீரப்பன் குழுவினரை பிடிக்க இராணுவத்தை வரவழைக்க வேண்டும் கேட்டுக்கொண்டனர். (சே-இ)

---

## தெரிவுக் குழுவிலிருந்து தமிழ் குழுக்கள் வெளியேறுவதை தடுக்க அரசு முயற்சி

(கொழும்பு)

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிலிருந்து, தமிழ்க் குழுக்கள் வெளியேறுவது தடுப்பதற்கு அரசு உயர் மட்டத்தில் பேச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஐனாதிபதியின் வெளிவிவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன், அரசகரும மொழி அமுலாக்கல் ஆணைக்குழுவின் தலைவர் டெஸ்மன்ட் பெர்ணாண்டோ, 'மார்கா' அமைப்பின் தலைவர் கொட்பிறி குணசேகரா ஆகியோர், தமிழ்க் குழுக்களுடன் கொழும்பில் இதுவரை இரண்டு சுற்றுப் பேச்சுக்களை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பேச்சுவார்த்தைகளில், தமிழ்க் குழுக்கள் தம்முடைய குறைந்த பட்சக் கோரிக்கைகளுள் ஒன்றாக வடக்கு-கிழக்கு இணைப்பை ஐந்து வருடத்துக்கு நீடிக்க வேண்டுமென்று கோரியுள்ளன. (வி-இ)

---

## மரண அறிவித்தல்

### கந்தையா தம்பிப்பிள்ளை J. P.

(கைதடி)

கைதடி நாவற்குழி கிராம சபை, கைதடி சைவச் சிறுவர் இல்லம், கைதடி கிழக்கு சனசமூக நிலையம், இந்து வாலிபர் சங்கம் ஆகியவற்றின் முன்னாள் தலைவரும், கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோவில், கைதடி விக்கினேஸ்வர வித்தியாலய அபிவிருத்திச் சபை உபதலைவரும், லீலாவதி ஸ்ரோர்ஸ் உரிமையாளருமான கந்தையா தம்பிப்பிள்ளை சமாதானநீதவான் அவர்கள் 12-04-93ம் திகதி திங்கட்கிழமை காலமாகிவிட்டார். இவர் மீனாட்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பெரியதம்பி (இளைப்பாறிய ஓவசியர்), தங்கமுத்து, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (இளைப்பாறிய புகையிரத தலைமைப் பாதுகாவலர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், புஸ்பலீலாவதி, புஸ்பராசா, காலஞ்சென்ற புஸ்பராணி, புஸ்பராசேஸ்வரி, காலஞ்சென்ற புஸ்பவதி, புஸ்பரதி, புஸ்பமலர் ஜேர்மனி ஆகியோரின் அன்புத் தந்தையும், பொ. கந்தசாமி (உதவிப்பதிவாளர், மருத்துவபீடம், யாழ் பல்கலைக் கழகம்), விஷ்ணுதேவி, வே. சிவச்சந்திரலிங்கம் (V. மாணிக்கம் பிறதேர்ஸ், கொழும்பு), இ. குழந்தைவடிவேலு (ஸ்ரீ சச்சிதானந்தா என்டர் பிறைஸ்), சு. ஜெயவிக்னேஸ்வரன் (இ. போ. ச., கொண்டாவில்), தி. நந்தகுமார் (பிரதீபனு ஸ்ரோர்ஸ்), இ. சிவராசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், உஷாமினி, மயூரன், சகிலா, சிவகணேசன், சிவரஞ்சனி, ராஜிகா, தவரஞ்சிதா, பதிவர்ணன், சிவகஜனி (ஜேர்மனி), சிவபாலினி, ஸ்ரீ சஷ்டிகாந்தா, கௌசிகா, விலோஜிகா, வேணுஷா, பிரகாஷ் (ஜேர்மனி), பிரசாந் (ஜேர்மனி) பிரதீபனு ஆகியோரின் அன்புப் பேரனும், க. முருகேசுவின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-04-93ம் திகதி (இன்று) செவ்வாய்க்கிழமை மு. ப. 10-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக ஊரித்தல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: க. புஸ்பராசா,
(மகன்)
லீலாவதி ஸ்ரோர்ஸ்.

ராஜேஸ்வரி பவனம்,
கைதடி.

(எ-3051)

---

## தேர்த் திருவிழா

(யாழ்ப்பாணம்)

அத்தியடி பிள்ளையார் கோவில் தேர்த் திருவிழா நாளை புதன்கிழமை நடைபெறும்.

நாளை காலை 8.00 மணிக்கு வசந்த மண்டபபூசையும் 9-5 மணிக்கு தேர்ப்பவனியும் இடம் பெறும். (சே)

---

## ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் அமுலிலிருந்த ஊரடங்குச் சட்டம் நேற்றுக்காலை 6மணியிலிருந்து நீக்கப்பட்டதாக கூட்டுப்படை அறிவித்தது.

படையினரின் கட்டுப்பாடு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் இந்த ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (க)

---

### படை அதிகாரி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமுலில் இருந்ததாம். அம்புலன்ஸ் வண்டி இப்பகுதியில் அப்போது இருந்திருக்கக் கூடாதாம் அந்த இராணுவ அதிகாரி இவ்வாறு மேலும் தெரிவித்துள்ளாராம். (க-இ)

---

### செஞ்சிலுவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டங்கள் அனைத்தையும் ஒத்திவைக்கவேண்டும் எனவும், நிர்வாக கடமைகள், தொண்டர் சேவை, அனர்த்தங்கள் தொடர்பான சேவைகள் போன்ற அவசிய தேவைகள் ஆகியவற்றைமட்டுமே இந்த ஒரு மாத காலத்திற்கு மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ)

---

### க. பொ. த.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைப் பரீட்சார்த்திகளின் மொத்தப் புள்ளிகளை இன்று முதல் யாழ் கல்வித் திணைக்களத்தில் பாடசாலை அதிபர்கள் வந்து பெற்றுக் கொள்ளலாமென தெரிவிக்கப்படுகிறது.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் புள்ளிகள் இன்று தபாலில் சேர்க்கப்படும். (159-இ)

---

### புலிகள் தாக்கு பற்றி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மன்னாரில் இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டிலுள்ள வெலிஓயபாலத்துக்கு அருகில் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் அதிகாரி உட்பட மூன்று இராணுவத்தினர் பலியானதும் மணலாறுப்பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்துக்குள் புலிகள் ஊடுருவி தாக்கியதில் 20க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பலியானது பற்றி ஆராய உடன் உயர்மட்ட விசாரணையை நடத்துமாறு, பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது. (வி-இ)

---

### வலி மேற்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நோயாளர்கள் உட்படப் பன்னிருவர் படையினரால் விடுவிக்கப்பட்டனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர், குமணா கப்பலில் நேற்றுக் காங்கேசன்துறைத் துறைமுகத்திலிருந்து பருத்தித்துறைத் துறைமுகத்திற்கு இவர்களை அழைத்து வந்தனர்.

இவர்களில் எழுந்து நடக்க முடியாத நோயாளர்களைச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் யாழ் வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர்.

திருமதி மதனேனம் சிங்கராயர் (66 வயது இளவாலை), திருமதி சூசைனம் அந்தோனிப்பிள்ளை (80வயது) இளவாலை, கணபதிப்பிள்ளை நடராசா (72 வயது) மாதகல் ஆகியோரே மிகவும் நோய்வாய்ப் பட்ட நிலையில் இருந்தவர்களாவர். (56-159-இ)

---

## கொப்பேகடுவ கொலைச் சம்பவம்: மூன்று சர்வதேச நீதிபதிகள் விசாரணைக்கு நியமனம்

(கொழும்பு)

லெப்டினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட ஏழு படை அதிகாரிகளின் கொலைச் சம்பவம் குறித்து விசாரணை செய்ய, பொதுநல அமைப்பு நாடுகளைச் சேர்ந்த மூன்று நீதிபதிகளை நியமிப்பதற்கு அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

ஆனால் இந்த மூன்று நீதிபதிகளும் எந்தெந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பதைத் தெரிவிக்க அரசு மறுத்துவிட்டது.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் அராலித்துறையில் இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தில் மேற்படி அதிகாரிகள் கொல்லப்பட்டதும், அந்தச் சம்பவத்தை விசாரணை செய்ய, சர்வதேச ஆணைக் குழு ஒன்று நியமிக்கப்படவேண்டும் என திருமதி லலி கொப்பேகடுவ அரசைக் கோரியிருந்ததும் தெரிந்ததே. (159-இ)

---

## படையினர் சூடு மீனவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் படையினர் நாவாந்துறைக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி நேற்றுக் காலை சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

படகில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவரான நாவாந்துறை யோசப் வீதியைச் சேர்ந்த சந்தியாப்பிள்ளை ஜெயம் (28 வயது) என்பவர் இதில் படுகாயமடைந்து யாழ் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (56-இ)

---

## ஷெல் தாக்கு: அதிர்ச்சியில் வயோதிப மாது மரணம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 10ம் திகதியன்று பலாலி இராணுவ முகாமிலிருந்து வல்லைப்பாலத்தை நோக்கி படையினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலின் போது கோண்டாவில் வருவதற்காக பருத்தித்துறை வீதி வழியாக வந்துகொண்டிருந்த வயோதிப மாது அதிர்ச்சியடைந்த நிலையில் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

அல்வாய் வதிரி தேவரையாளியைச் சேர்ந்த திருமதி தெய்வானை கிருஷ்ணபிள்ளை 80 வயது என்பவரே அதிர்ச்சியடைந்து பின்னர் மரணமானவராவர். (56-இ)

---

## மனநோயாளர் தொகை யாழ். குடாவில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் மனநோயாளர் தொகை அதிகரித்து வருவதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடக்கு-கிழக்கில் தொடரும் இராணுவ நடவடிக்கைகள் மற்றும் வடபகுதி மீது விதிக்கப்பட்டிருக்கும் அரசின் பொருளாதாரத் தடைகளினாலேயே இவ்வாறு மனநோயாளர் தொகை அதிகரிப்பதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (க-இ)

---

## மூன்று கப்பல்களில் உணவுப் பொருள்கள்

(கொழும்பு)

புதுவருடத்தை முன்னிட்டு வடபகுதிக்கு மூன்று கப்பல்களில் உணவுப்பொருள்களை அனுப்பியுள்ளதாகவும், அவை தற்போது பருத்தித்துறைக்குச் சென்று விட்டதாகவும், அத்தியாவசிய சேவைகள் நாயகம் நேற்று தெரிவித்தார்.

வாதுவ, குமண, குமாரி ஆகிய மூன்று கப்பல்களில் அரிசி, பருப்பு மா, சீனி, பால்மா, கருவாடு, செத்தல் மிளகாய், சவர்க்காரம், மண்ணெண்ணெய் உட்பட பல உணவுப் பொருட்களும் வேறு சில ஆவணங்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அத்தியாவசிய செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (வி-153)

---

## பணம் தருவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் சமீப காலத்தில் நிலவிய பணத்தட்டுப்பாட்டை நீக்கும் முகமாகவும் புத்தாண்டையொட்டி வாடிக்கையாளரின் தேவைக்காகவும் இலங்கை வங்கியால் நேற்று கொழும்பிலிருந்து பணம் தருவிக்கப்பட்டது.

இன்று செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்டத்திலுள்ள சகல இலங்கை வங்கிக் கிளைகளும் காலை 9 மணி முதல் 11 மணி வரை பணம்கொடுப்பனவுகளுக்காக மட்டும் திறக்கப்பட்டிருக்கும் என இலங்கை வங்கியின் யாழ். மாவட்ட அலுவலகம் அறிவித்துள்ளது.

---

## பரீட்சை முடிவுகள்

(கொழும்பு)

பொது எழுதுவினைஞர் சேவையின் வகுப்பு II ல் பிரிவிலுள்ள அரச சேவையாளர்களுக்கான வினைத் திறமைகாண் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு இதனைச் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் அமைச்சுக்களுக்கு அனுப்பியுள்ளது.

வெளி மாவட்டங்களுக்கும் இவை விரைவில் கிடைக்க உள்ளன. (சே)

---

## பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியின் பயிற்சி வகுப்புக்கள் புதுவருட தினத்தை முன்னிட்டு 15-ம் திகதி நடைபெறமாட்டாது. மேற்படி பயிற்சி வகுப்புக்கள் 16, 17 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளது.

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office, Sri Lanka under licence Number B/10836/B